**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. S.T.C.No. 48/2026**

**Deposition of Witness for Complainant PW1**

**திரு. ரவீந்திரன் த/பெ. வேலாயுதம் வயது. 55 ஊர். டானிங்டன், கோத்தகிரி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**07.07.2026 Witness Signature :**

**PW1 குறுக்கு விசாரணை 01.30 P.M**

1. வழக்கின் எதிரியின் பெயர் எனக்குத் தெரியும். ராஜேஷை எனக்கு நேரடியாக பழக்கம் இல்லை என்றாலும், அவரது அப்பாவின் மூலம்தான் பழக்கம் என்றால் சரிதான். ராஜேஷின் அப்பாவிடம் நான் சொத்து வாங்க வேண்டி ஒரு ஒப்பந்தம் செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சொத்து விஷயத்தில் நான் போட்ட ஒப்பந்தம் முடிவடையாமல் எனது தரப்பில் இருந்து ரூ.30,000/– எதிரி தரப்பினருக்கு தர வேண்டி உள்ளது என்றால் சரிதான். எங்களுக்குள் சொத்து விவகாரம் முடிவடையாமல் இருப்பதனால் சொத்து வேண்டாம் என முடிவெடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். சொத்துக்காக நான் கொடுத்த காசு எனக்கு வந்தால் போதும் என சொல்லியிருந்தேன்.

2. எனது புகாரில் நான் ரூ. 3,50,000/– ராஜேஷ்க்கு கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதை நான் பணமாக கொடுத்தேன். ரூ.20,000/– மேல் பணம் யாருக்கு கொடுத்தாலும் வங்கி பரிவர்த்தனை மூலம்தான் கொடுக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை எண். 291963, எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 01.11.2025 தேதியில் கொடுத்தார். ராஜேஷ் குடும்பத்தோடு சொத்து வாங்க வேண்டி இருந்த வியாபாரம் தவிர வேறு எந்த வியாபாரமும் இல்லை என்றால் கொடுக்கல் வாங்கல் இருந்தது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 07.07.2026
Judicial Magistrate,
Kotagiri